உ

முருகன் துணை.

# திருப்போரூர்த் தலபுராண

# சரித்திரச் சுருக்கம்.

---

முன்னர் வடமொழியி லிருந்ததைக் கிருஷ்ணசாஸ்திரியாரவர்களைக்கொண்டு தமிழில் மொழிபெயர்த்து விருத்தச்செய்யுளாற்பாடிய அப்புராணசரித்திரத்தை வசனரூபமாகச் செய்துதருகவெனத் தையூர் நரசப்ப சுப்பராயமுதலியார்-வைத்தி-சுப்பராயமுதலியா ரிவர்கள் கேட்டுக்கொண்டபடி மேற்படி தேவஸ்தானம்,

தருமகர்த்தர்

## ஸ்ரீசிதம்பரசுவாமிகள் ஆதீனம்

௯-ம்-பட்டம்

## முத்துக்குமாரத்தம்பிரான்

சுவாமிகளநுமதியில்

புரசை அஷ்டாவதானம்

## சபாபதிமுதலியாரியற்றியது.

---

இஃது

கடம்பூர் சுரோத்திரதாராகிய

## அப்பாசாமிமுதலியா ரவர்களும்

சகோதரராகிய மேற்படி தேவஸ்தானம்

உதவிதருமகர்த்தர்

## வேதகிரிமுதலியாரவர்களும்

கோரியபடி


## பு-ம-சபாபதிமுதலியாரது

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

கலியாண்டு-௪௯௭௫-ல்-நிகழும்-பவ௵-கும்பரவி.

கண்ணுவர்-தானங்களாற்பெறலாமென்றும்,கௌதமர்-புத்திரரால்அக ப்படுமென்றும், துருவாசர்-துறவால்சித்தியாகுமென்றும் இவ்வாறுஅ வ்விருடிகள் பற்பலவிதமாகயோசித்துக்கொண்டிருக்கையில் வியாசரு ஷிக்குமுக்கியமாணாக்கராகிய சூதபுராணிகர் முனிவர்களது புண்யாதி க்கத்தினால் அவ்வனத்தில்வந்தனர்.

அம்முனிவர் அவரைநோக்கி அர்க்கியபாத்தியமுதலியவற்றாற்பூ சித்து ஆசனத்திலிருத்தினர் அவர் சூதபுராணிகரைத்தோத்திரஞ்செ ய்து தமது உள்ளக்கொள்கையை அவரிடத்தில்விண்ணப்பஞ்செய்து தாம்பேசிக்கொண்டிருந்த பலவிதயுக்திகளையும்விவரமாகச்சொல்லிப் பிரார்த்தித்தனர். சூதபுராணிகர்முனிவரரைநோக்கிச்சொல்லுவார் பதி னெண்புராணங்களையும்வெளியிட்டவராகியவியாசரால்பூர்வத்தில் சம ஸ்தவேதாகமங்களால்நிச்சயிக்கப்பட்டிருக்கின்றஇந்தப்பொருளென க்குக்கிடைத்தது,காந்தபுராணத்தில்சங்கரசங்கிதையில்சிவரகசியகண் டத்தில்ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளால் வள்ளியம்மைபொருட்டு விவரித் துச்சொல்லப்பட்டுள்ளதாயிருக்கின்றது- அதனை நான்கேள்வியுற்றபடி சொல்வேனாக நீவிர் பரமபக்தியோடுகேட்கத்தக்கதென்றுசூதபுரா ணிகர்சொல்லிவருகின்றனர்.

ஊழிகாலங்கள்தோறும்வளர்ந்தோங்குகின்ற ஸ்ரீகைலாசத்தின் கொடுமுடிநடுவில்சகலவித அலங்காரங்களால்நிறைவுள்ள திருக்கோயி லின் நவரத்தினங்களழுத்தியசிங்காதனத்தில் ஸ்ரீபார்வதிசமேதராய் வி நாயகர்முருகக்கடவுள்சூழ்ந்திருக்கப்பரமேசுவரர்வீற்றிருந்து பிரமவி ஷ்ணுக்களும் ஜனகர்முதலியமுனிவரரும் அநந்தமுத்தர்களும், நந்தி தேவர்முதலியகணங்களும்அளவற்றஉருத்திரர்களும்மற்றைமேல்லாத் தேவர்களும்வந்துநெருங்கிப்பயபத்தியுடன்சேவிக்க அவரவர்களுக்கு ம்இச்சித்தவரங்களை அநுக்கிரகித்துவருகின்றசமயத்தில் அநேகருஷிக ளுடன் அகஸ்தியமுனிவர் பக்தியினாற்பலமுறைநமஸ்கரித்துக்கொண் டு அதிவிநயத்துடன்மெள்ளமெள்ளநெருங்கிச்சந்நிதானத்தில்வந்து அ நேகமுறைஅஷ்டாங்கமாக ஸ்ரீபாதங்களைவணங்கிவேதவாக்கியங்களா ல்தோத்திரம்பண்ணினர். அதனைக்கேட்டுத்திருவுளமகிழ்ந்தருளியபர மேசுவரர்அவரைக்கடாக்ஷித்துயாதுவேண்டிவந்தனையெனவினவ-அக த்தியர் இறைவரைப்பணிந்து விண்ணப்பஞ்செய்கின்றனர்,ஐசுவரியம் வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியமென்னும்ஆறும், பகமென் னும்சப்தத்தாற்சொல்லப்பட்டுள்ளது-அவற்றின்உண்மையை அடியே னுக்குத் தெளிவாகவிளக்கியருளவேண்டுமென்ன, முனிவனே நீவினா விய [illegible]தனமாயுள்ளது - உன்னால் அறிந்துகொள்ளத்தக்கது

தான். இப்படியாகவேஅதனைஉணர்ந்துள்ள ஸ்ரீசண்முகமூர்த்திமுன்னமொருகாலத்துநம்பொருட்டுச்சொல்லியிருக்கின்றனர், அச்சரணைப்பொருளதாதலால்நமக்குஆநந்தத்தையுண்டாக்கியது, ஆதலால்ஸ்கந்தனையடைந்து அதனைக்கேட்டுக்கொள்ளக்கடவையென்று கட்டளையிட அவ்வாறேஅகஸ்தியர் புறவிடைகொண்டு சகலவிருக்ஷங்களாலும் பல அருவிகளாலும்நிறைந்துஅலங்காரமாயிருக்கின்றஅநந்த நவரத்தினமண்டபங்களாற் சூழ்ந்துள்ளதாகிய ஸ்ரீகந்தகிரியில்சகலதேவர்களும்வணங்க வீரவாகுதேவர்முதலியோர்புறங்காத்துப்பணிகேட்கச்-சத்திகளிருவருடன்சிம்ஹாசனத்தில் ஸ்ரீகந்தர்வீற்றிருக்கின்றதிருவோலக்கத்தை அகஸ்தியர்காணப்பெற்று ஆனந்தபாஷ்பங்களால்நனைந்த சரீரத்தையுடையவராய்மலர்ந்தமுகத்துடன்சந்நிதியிலடைந்து பலதரமும் நமஸ்கரித்துக்கைகளையஞ்சலித்துக்கொண்டுவேதப்பொருள்களாற்றுதிசெய்தனர்.

துதித்துப்பாடிய அகஸ்தியனைத் திருநோக்கஞ்செய்தருளி அவரதுவிண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டுநம்மைத்துதிசெய்த தோத்திரம்அகஸ்தியகீதையென்றுவிளங்கக்கடவது இப்போதுநம்மைக்கோரிவந்துபிரார்த்தித்த ஷாட்குண்யப்பொருளைப், பலவகைச்சத்திகளுக்கும்,பிரமவித்துக்களுக்கும்,திருமால்முதலியதேவர்களுக்கும்,அந்தணர்முதலியோருக்கும்போகத்தையும்முத்தியையும்கிடைப்பித்துஅவர்களால்வசிக்கத்தக்கதாயுள்ளநிலையுலகத்தில், குருமூர்த்தமாகியுபதேசிக்கின்றோமென்றருளிச்செய்யக்கேட்டு அகஸ்தியர் மீண்டும்வணங்கி உலகத்தில் அநேகக்ஷேத்திரமுண்டுஅவற்றுள்எந்தக்ஷேத்திரத்தில் அதனையடியேனுக்குக்கட்டளையிட்டருளத்திருவுளங்கொண்டது,அதனைக்கருணையால்திருவாய்மலர்ந்தருளல்வேண்டுமென்றுநமஸ்கரிக்க,ஸ்ரீசண்முகமூர்த்திஅருளிச்செய்கின்றனர்.

உலகத்தில்போகமோக்ஷங்களுக்குஹேதுவாகஅநந்ததலங்களிருக்கின்றன, அவற்றுள்பரமேசுவரருக்குப்பிரீதிகரமாயுள்ளவைபதினாறு அவற்றுள் ஆறுதலங்கள்விசேடமானவை, அவற்றைப்பார்க்கினும்நமக்கு ஆநந்தகரமாயும், சாந்நித்தியமாகியும், பாபசமூகமாகியஇருட்டுக்குத்தேஜசுகளாகியும், முத்தியென்னும்ஸ்ரீசையோகத்திற்குப்புட்பவமளியாகியும்சர்வபாபவிமோசனகரமாகியுமுள்ளதலங்கள் அறுபத்திநான்குண்டு, அவற்றுள் ஆறுதலங்கள்நமக்குரியவை. அவை-பிராக்கியம்-திருச்செந்தூர்-சாட்சிசைலம்-கோமுக்தம்-மகாகதம்பவனம் - யுத்தபுரமென்பனவாம். இவ்வாறுதலங்களுள்நமக்குமிகுந்தப்ரீதிகரமாயுள்ளதுயுத்தபுரியெனப்படும்திருப்போரூர்-அதுநாம் இடைவிடாமல்வசிக்கின்றஸ்த

லமாகிப்பாபமென்னுங்காட்டுக்கு அக்கினியாகியும்,சோகமாகியவிருட்டுக்குச்சூரியமண்டிலமாகியும்,ஜெனனமரணமாகியவிஷப்பூண்டுகளுக்குக்கோடாலியாகியும், முத்தியென்னும்பெண்ணின்விவாகத்திற்குமங்களகிருகமாகியும்,சகலதேவர்களுக்கும்ஆஸ்பதஸ்தானமாகியும்,ருஷிசங்கத்தினால்உபாசிக்கப்பட்டதாயுமுள்ளது, அது அத்தியந்தம் புண்ணியக்ஷேத்திரமாகவுமிருக்கின்றது, அந்தக்ஷேத்திரத்தில்சகலதேவர்களும்பூசிக்கின்றயுத்தபர்வதமென்றொருமலையுண்டு,அதன்கொடுமுடியில்பூர்வகாலத்தில்நாம்பரார்த்தமாகப்பிரதிஷ்டைபண்ணியபரமேசுவரர்பார்வதிசமேதராய் விக்நேசுவரருடன்வீற்றிருந்துபக்தஜெனங்களுக்குச்சதுர்வித புருஷார்த்தபலன்களையும் பெறுவித்து,மனதாரஸ்மரிக்கின்றவர்களுக்குச்சகலபாவங்களையும் பரிகரித்து இடைவிடாமல்சாந்நித்தியராயிருக்கின்றனர். அந்தப்பர்வதத்தின்கிழக்கில் அன்பர்களுக்கு எண்ணியவாறுபலன்களைக்கொடுத்துக்கொண்டு விஷ்ணுபுத்திரியாகியவள்ளியம்மையும், இந்திரன்புத்திரியாகியதெய்வயானையாரும், இருபக்கத்திலுமிருக்கநாமெக்காலமும் நீங்காமல்வீற்றிருக்கின்றோம், அதற்குத்தெக்ஷிணபாகத்தில் மூழ்கினவர்களுக்குப் பிரமகத்திமுதலிய கொடியபாவங்களையும்நசிக்கப்பண்ணுகின்றதாயுள்ளதொருதடாகம்,அது வள்ளையாரோடையென்றும் சரவணப்பொய்கையென்றும் பெயருள்ளது, அது தீர்த்தவிசேஷத்திற்சிறந்திருக்கின்றது, அதற்குவடதிசையில்நிம்பவிருக்ஷத்தின்மூலத்தில்விக்நேசுவரர்வீற்றிருந்து தம்மைவந்துதெரிசிப்பவர்களுக்குவிக்நங்களையொழித்து அபீஷ்டங்களைப்பாலிக்கின்றனர். இவ்வகைமகாத்மியமுள்ளயுத்தபுரியில்நாம்பிரணவப்பொருளை உபதேசித்தருளுவோம். எந்தத்தலத்தில் தேவர்களும்முனிவர்களும் சித்தர்முதலியோரும்மாசற்றமனதுடனேநம்மைப்பக்திபூர்வகமாகப்பூசித்துஇஷ்டபலன்களை அடைகின்றனரோஅந்தத்தலமாகியதிருப்போரூரின்கண் அகஸ்தியமுனியேபோய்த் தியானித்துக்கொண்டிருந்தால் உனது அபீஷ்டம்நிச்சயமாகக்கூடியவிரைவிற்சித்தியாகுமென்று பிரசாதித்தருளினர்.

இவ்வாறு சொல்லக்கேட்டநைமிசாரணியமுனிவர்கள் யுத்தபுரிக்ஷேத்திரத்தின்எல்லையும்அதிலுள்ளசிவதலங்களும், விஷ்ணுஸ்தலங்களும்விநாயகர்தலங்களும்இன்னதின்னதென்றுசொல்லவேண்டுமென வினவச்சூதபுராணிகர்சொல்லுகின்றனர்:

ஸ்ரீகாஞ்சிபுரத்திற்குக்கிழக்கில்ஐந்துயோசனைக்குள்ளும்,திருக்கழுக்குன்றத்திற்குஈசானதிக்கிற் பத்துநாழிகைவழிக்குள்ளும், கிழக்குச்சமுத்திரத்திற்குமேற்கில்இரண்டுநாழிகைவழிக்குள்ளும், [illegible]யிலே

லையைச்சார்ந்ததிருவான்மியூர்க்குஇருபதுநாழிகைவழிக்குள்ளும் அத்தலமிருக்கின்றது. இங்ஙனம்நான்குதிக்கிலுமுள்ளஎல்லையினுள் ஒன்றரைக்காவதமாம். அத்தலத்தில்ஆன்மாக்களுக்குக்கலிகாவத்தையும், இயமவேதனையுமுண்டாவதில்லை. ஸ்ரீசண்முகமூர்த்தியின் சத்திபுனையாற்பெருமையுற்று அவரதுதேஜசினால்நிறைந்துள்ளது. அங்குவசிப்பவர்கட்குமுத்திஎளிதினடையக்கூடும். பத்தியாலாவது அபக்தியாலாவது ஆங்குவசிப்பவன் சர்வபாவத்தினின்றுநீங்கித் தேகாந்தத்தில் கந்தனுகலாசத்தையடைவன். அத்தலத்திலுள்ளயுத்தகிரியைஒருமுறை வலம்வந்தவன்மற்றைப்புண்ணியதலங்களில்வாசஞ்செய்தவனுக்குச்சகலஇஷ்டகாமியங்களையும்பெறுவன் அதன்கொடுமுடியிற்சுயம்புவாய்வீற்றிருக்கின்ற ஸ்ரீபாலாம்பிகைசமேதமகேசுவரனை ஒருமுறைபக்தியுடன் பிரதக்ஷிணம்பண்ணினவன்பந்தவிமோசனம்பெறுவன். அம்மலைதிருமகள் பூஜித்தமையால், ஸ்ரீபர்வதமென்றும், சண்முகமூர்த்தியால் அங்குச்சிலஅசுரர்தாக்கப்பட்டுப் போய்விட்டமையால் யுத்தகிரியென்றும் பெயர்பெற்றது.

அவற்றின்வரலாறு. பூர்வம்ராதாந்தரகற்பத்தில் ஸ்ரீவைகுண்டத்தின்கண்விஷ்ணுதேவர்ஒருநாள்மஹாமணிமேடைமேற்பரிவாரங்களின்றிஉபேந்திரனுடன்ஸ்ரீதேவிசமேதராய்வீற்றிருந்து சிலரகசியவார்த்தையாடிக்கொண்டிருந்தசமயத்தில்அங்குவந்த கண்ணுவமுனிவனைத் தமதுரகசியவார்த்தைகளாலேபரவசராகஇருந்தமையால் தாமுபசரிக்கவில்லை. அதனாற்கண்ணுவர்கோபமுற்றுவிஷ்ணுதேவனையும், ஸ்ரீதேவியையும், உபேந்திரனையுநோக்கி நம்மை உபசாரஞ்செய்யாதிருந்தமையால்நீவிர்மூவருமுறையேஊமையாகவும், மானாகவும், வேடனாகவும்தோன்றிவனங்களிற்சஞ்சரிக்கக்கடவீரென்றுசபித்துத்தமதுஆச்சிரமம்வந்துசேர்ந்தனர்.

பின்பு-மேற்கூறிய மலையைச்சார்ந்த ஆரணியத்தில் உபேந்திரன் வேடர்க்கரசனாகத்தோன்றியிருந்தான்அவ்வனத்திற்குச்சிலதூரத்திலுள்ளஓர்மலைச்சாரலில்விஷ்ணுதேவர் சிவமுனியென்னும்பேருடன் மரவுரியுந்திவிபூதிருத்திராக்ஷதாரணராய்ப் பஞ்சாக்ஷரமந்திரத்தைஜெபித்துக்கொண்டொருபுன்னைமரத்தின்கீழ்த்தவத்திலிருந்தனர். திருமகளுமொருபெண்மானாகித்துணையில்லாமையால்பயமும், மருட்சியுமிகுந்துதனதுதுணையாகியபதியையடையவேண்டுமென்னுமிச்சையுடன் வனங்கடோறுந்தேடிப் பார்த்துக்கொண்டு துணையைக்காணாமையால் அதிகஏக்கங்கொண்டுசஞ்சரித்துவருங்கால். ஒருநாள்தெய்வாதீனத்தால்மேற்கூறியமலைச்சாரலில்வரப்பெற்று அங்குதவத்திலிருக்கின்றசி

வமுனியைக்கண்டுஇச்சையுண்டாகிஅருகில்வந்துஇடைவிடாமல்அவர்முகத்தைமோந்துமோந்து அன்புடனெதிரில்நிற்கமுனிவரும்அழகுள்ளஇளமைவாய்ந்த அந்தப்பெண்மானையிச்சையொடுங் கண்களால்நோக்கியமாத்திரத்தில்அதுகெர்ப்பங்கொண்டு அங்கேஓரோடைக்கரையில்குறத்தியர்வள்ளிக்கிழங்குகள்தோண்டியபள்ளத்தில் ஒருபெண்குழந்தையைப்பெற்றது அக்குழந்தைதன்னில்நின்றும்வேறுபட்டதாய்க்குரல்பேதமுள்ளதாயிருந்தும்அதனைத்தான்விட்டுப்போகத்துணியாமல்அடிக்கடிமுகத்தைமோந்தும்உடம்பைநாவினால்வருடியும்அடங்காதபிரீதியுடன்பால்சுரந்துபூரிக்கின்றமடியையுடையதாய்க்கூவிக்கூவிச் சுற்றிச்சுற்றி ஓடியும்வந்தும்களித்திருந்தது, அன்றியும் அக்குழந்தையையெடுத்துக்கொண்டுபோகமாட்டாமையால் காட்டுமிருகங்கள்அதனைவருத்தி வதைத்திடாதபடிப்பாதுகாத்துக்கொண்டு மிகுந்தஅச்சத்துடனிருந்த சமையத்தில் நான்குபக்கங்களிலும் நாய்கள்சூழப் பம்பைகளொலிக்கவார் வலை வெடிகளுடன்வேட்டைமேல்வருகின்றவோர்கூட்டத்தைத்தூரத்திற்பார்த்துமருண்டுபயந்து இனியாதுசெய்யக்கடவோம், நாம்இங்குதாமதித்துநின்றால்வேடர்வந்துநம்மைப்பற்றிவதைப்பர். குழந்தைக்குவேறோர்துணையுமில்லை, எவ்வாறாலும்நாம்இதுபோதுஇவ்விடத்தைவிட்டுநீங்குவதேநலன், எல்லாவுயிர்களுக்கும்பதியாகிய கடவுளே இக்குழந்தைக்குப்பிரியாத்துணையாகுமென்றுட்கொண்டு மேல்நடக்கவிருக்கின்றநிமித்தத்தால் தன்குழந்தையைவிட்டுப்போகத்துணிந்தது.

அந்தருணத்தில் வேட்டைமேல்வந்தஉபேந்திரவேடராஜன்அக்குழந்தையைக்கண்டு பூரித்து கையினால்தழுவியேந்திக்கொண்டுபோய்த் தனதுபத்தினிகையிற்கொடுக்க அதனைப்பார்த்து மகிழ்ந்து, இருகையாலும்வாங்கிப்பால்சுரந்து அதற்குஊட்டிச்சீராட்டிவளர்க்க, வள்ளியம்மையென்னும்பெயருடன் அது வளர்ந்திருந்தது.

பின்பு வனங்கடோறுஞ்சஞ்சரித்துவருங்கால் சாபவிமோசனகாலம்நேர்ந்தமையால்திருப்போரூரின்கணுள்ளயுத்தகிரியையடைந்து நாற்றிசையினுஞ்சுற்றிப் புல்மேயவேண்டுமென்னுமிச்சையால் மூன்றுதினம் வலமாகத்திரிந்துகொண்டிருக்க அம்மலையின்தெய்வத்தன்மையால்மான்வடிவுநீங்கிச்சுயரூபத்தைப்பெற்றவளவில் ஸ்ரீதேவிக்குஅதிசயமும்அன்புந்தோன்றி இக்கிரியில் ஏதோதெய்வத்தன்மை நிலைபெற்றுள்ளது. இதுபுண்ணியக்ஷேத்திரமாகும்நிச்சயந்தான்வேறேவிசாரம்வேண்டுவதில்லையென்று அத்தலத்தை நான்குபக்கங்களிலும்போய்ப்பார்த்துப்புண்ணியதீர்த்தமாகியவள்ளையாரோடையில்ஸ்நானஞ்செய்து நித்திய கர்மங்களை முடித்து அதன்வடகரையிற் கோயில்கொண்டிருக்கும்

ஸ்ரீசண்முகமூர்த்தியைத்தரிசித்துவிடைகொண்டுயுத்தகிரியைப் பத்தியொடுவலம்வந்துமேலேயேறிக்கொடுமுடியின்கண்சிவலிங்கப்பெருமானைத்தெரிசித்துஇந்தமஹாலிங்கத்தின்பிரபாவத்தினாலேயன்றோ நமக்குச்சாபவிமோசனங்கிடைத்ததென்றுதுதித்து,கிரீசனையும், பாலாம்பிகை அம்மையையும், நின்மலமானதீர்த்தம் புஷ்பம் அக்ஷதை முதலியவற்றால்அபிடேகஅலங்காரங்கள் செய்துநாடோறும்பூசித்து நவநவமாகியதோத்திரங்களால் துதிசெய்து பிரார்த்தித்துத் தன்பதியாகியவிஷ்ணுதேவனையடையவேண்டுமென்னுங்கருத்தால் அங்குதவத்தைமேற்கொண்டுஆயிரவருடவரைநோற்றிருக்க.

மேற் புன்னைமரத்தின்கீழிருந்தசிவமுனிவர்பிறகு அநேகவனங்களிற்சஞ்சரித்துயோகுசெய்தும்,சாபவிமோசனங்கிடையாமையால் ஸ்ரீகைலாசத்தைநோக்கிச்சென்றுஅச்சாரலில்ஆயிரவருடவரையில் அருமையானதவஞ்செய்துகொண்டிருக்கக்,கைலாசபதிபிரத்தியக்ஷமாகிஅநுக்கிரகித்தருள்கின்றார்.சிவமுனியே பூமியின்கண்பிரசித்தமாயிருக்கின்றநமதுதலங்கள்அநேகங்களுள் யுத்தபுரியென்றொரு மஹாஸ்தலமுண்டு, அதிற்கண்ணுவமுனிவனாச்சிரமத்திற்ஸ்கந்தரதுஆநந்தத்திருக்கையானயுத்தகிரியின்கண் கந்தராற்பிரதிஷ்டைசெய்தசிவலிங்கமொன்றுண்டு. அதுகண்ணுவமுனிவனாலும்பூசிக்கப்பட்டுள்ளது.அம்மலையிற்கந்தரது உபாசனையை முக்கியமாகவுடைய அம்முனிவன் நாடோறுங்கிரிவலஞ்செய்துகொண்டுஆச்சிரமத்திலிருக்கின்றனன்.

அங்கு உனதுபாரியாகியதிருமகள்சாபவிமோசனமடைந்திருக்கின்றனளாகையால் அவ்விடத்தி லுனக்கும் சாபவிமோசனங்கிடைக்குமென்றுசொல்லியெழுந்தருளலும் சிவமுனிவர் ஸ்ரீகைலையினின்றும் பூலோகத்தையடைந்து யுத்தகிரியைச்சேர்ந்து தரிசித்தமாத்திரத்தில் ஹிருதயம்நிர்மலமாகிஅதிசயங்கொண்டுஇஃதென்னஅற்புதம் இவ்வுலகத்தில்அநந்தவனங்களிற்போய்நாம்தவஞ்செய்தும் இவ்வாறுமனம் நிர்மலமாகவில்லை, இங்கேபிரவேசித்தமாத்திரத்தில்நிர்மலமாயிற்று,இதுமஹாஆச்சரியமெனஎண்ணி ஸ்ரீகைலாசத்திற்பரமசிவனால்சொல்லியருளியபுண்ணியதலம்இதுவேயாம் அதோதெரிந்துகாணப்படுவதுகண்ணுவராச்சிரமமாகும், அதற்கருகில்தோன்றுவதுதான்யுத்தகிரி,அதற்குக்கீழ்பாலுள்ளதுகந்தராலயமாகும்,எனநிச்சயித்துஆநந்தாகாரராய் அணுகி அன்னப்பறவைகள்வசித்தொலிக்கின்றதாமரைமலர்நிறைந்து வண்டுகள்சீதங்கள்மிகுந்துஉத்தமர்களதுஉள்ளம்போல் பாசமற்றிருக்கின்றது[illegible]சித்தர்முதலியதேவர்களால் சேவிக்கப்பட்டுப்பிரமஹத்திமுதலியமாபாதகங்களைநிவர்த்திசெய்துபிரசித்தமே

ன்றுபிரசித்தமாயுள்ளவள்ளையாரோடையைக் கங்காதீர்த்தமாகப்பாவித்துச்சங்கற்பமேற்கொண்டுஅதில்மூழ்கி விபூதிருத்திராக்ஷாலங்கிருதராய்நித்தியகன்மத்தைமுடித்துஸ்கந்தனைத்தரிசித்து அத்தலவிசேடத்தைஅவர்சொல்லக்கேட்டுப்புளகாங்கிதமுற்றுப்பணிந்துஅவர்திருவருளைமேற்கொண்டு கிரியைவலம்வந்துஅதன்சிகரத்திலுள்ளமஹாலிங்கத்தைப்பத்திபூர்வகமாகவணங்கிச் சங்கற்பஞ்செய்துகொண்டு, காமிகஆகமத்திற்சொல்லியவிதிப்படி அபிடேகமுதலியனவும் அன்புடன்செய்துசகலவுபசாரங்களிலும்பூசித்துவேதவாக்கியங்களாற்பலவிதமாகத்தோத்திரஞ்செய்தனர்.

அப்பொழுது விஷ்ணுதேவர் செய்த திவ்ய பூஜையினாலும் தோத்திரங்களாலும் ஆநந்தமுற்றுப் புத்திரர்களுடன் பார்வதிசமேத கைலாசநாதர் சிவலிங்கத்தினின்றும்வெளிவந்து காக்ஷியருளி அவரதுசாபவிமோசனஞ்செய்து ஸ்ரீதேவிஅதற்குமுன் அங்குவந்து தானுஞ்சாபவிமோசனம்பெற்றுத் தம்மைப்பூஜித்துத் தன்பதியை யடையவேண்டிக்கந்தராலயத்தில் வள்ளியம்மைக்கருகில்நோற்றிருக்கின்ற செய்தியைச்சொல்லி-ஸ்ரீதேவியையும் வரவழைத்து உனது பூசையினாலும் கிரிப்பிரதக்ஷிணத்தினாலும்அளவில்லாதஆநந்தமுற்றோம், உனதுகோரிக்கையின்படிஉனதுபதியைப் பெற்றுக்கொள்கவென்றுதந்தருளி ஸ்ரீதேவியைநோக்கியநுக்கிரகிக்கின்றனர்.

இந்தமலைக்கு ஈசானத்தில் கீழ்ச்சமுத்திரக்கரையில் சிலமுனிவர்கள் உன்னைப் புத்திரியாகப்பெறவேண்டி நெடுங்காலம்தவஞ்செய்யாநின்றனர், அவர்களுக்குப்புத்திரிகளாயவதரிப்பாய், ஓர்காலத்திற் சதுரங்கவிளையாட்டில் உனக்கும் உன்பதிக்கும் வாக்குவாதத்தினால் நீ தனித்து நீங்கி அம்முனிவர்கட்குப் புத்திரிகளாயிருக்க,இந்த விஷ்ணுதேவர் வராகரூபியாய்த்தேடிக்கொண்டுவந்துஅம்முனிவராச்சிரமத்திலிருக்கும்உன்னை ஓராண்டுபரியந்தம் ஒவ்வொருபெண்ணாக விவாகஞ்செய்து நித்தியகல்யாணரென்னும்பெயருடையராயிருப்பர், அன்றியும் விஷ்ணுதேவர் உன்னைத் தமதுமடியிலேந்திக்கொண்டு ஒருபோதுங்கீழேவிடாமலிருப்பாராகையால்அந்தக்ஷேத்திரம் வாமகேவியென்னும் நாமத்தையுடையதாகும்.

இன்னுங்கேட்பாயாக,உனக்குப்பிரீதிகரமாயிருக்கின்ற சுக்கிரவாரம்விடியற்காலத்திலெழுந்திருந்து ஸ்நானமுதலிய நித்தியகன்மங்களைப்பிரணவாமிர்ததீர்த்தத்திற்செய்துநிறைவேற்றி நட்டமாலும்புஷ்கரிணியிலும் நமதுகுமாரர்களாலும் பூசிக்கப்பட்டிருக்கின்ற இவ்வோங்காரரூபியாகிய ஸ்ரீமலையைப்பத்தியோடுபத்திமையோடும் பிரதக்ஷிணஞ்செய்கின்ற

ன

னே அவன்எழுபிறவியாகிய துன்பங்களினின்றும்விடுபட்டவனும். இக்கிரியைமுக்காலும்வலம்வரபவன் பாபரஹிதனாய் ஆயிரமச்வமேதஞ்செய்தபயனையடைந்துசெல்வமிகுந்து அபிஷ்டங்களைப்பெற்றுச் சந்தானவிருத்தியுடன்வாழ்ந்திருந்து தேகாந்தத்தில்நமதுபதவியையும் அடைவனென்றும், வருடந்தோறும்ஆடிமாதக்கார்த்திகையில்நியமத்துடன் தேவ முனிவ யக்ஷ கந்தருவர்முதலியோரும்தத்தம்பத்தினிகளுடன் இங்குதரிசனத்தின்பொருட்டு வருகின்றனராகையால் அவர்களுடன், நீங்களிருவீருங்கூடிவந்து சோமாஸ்கந்தராகியவெம்மை - பக்தியினாலாராதித்துச்சேவித்துஆநந்தத்தையடையக்கடவீரென்றுஞ்சொல்லியருளினர்.

இவற்றைக்கேள்வியுற்று இக்கிரியானது பிரணவாத்மாவென்றும், இத்தீர்த்தம், பிரணவாமிர்தமென்றும் யாதுகாரணத்தாற்பெயர்பெற்றன, அவ்வரலாற்றைச்சொல்லியருளவேண்டுமென்று விஷ்ணுதேவர் அஞ்சலித்து வினவுதலும். ஸ்ரீகைலாசநாதர் திருவாய்மலர்ந்தருளுகின்றனர்.

ஒருகற்பாந்தரத்தில் வேதங்கள்கலிகாலத்தையஞ்சி அருந்தவஞ்செய்து நம்மைப்பிரார்த்திக்க அவைக்குநாம் காட்சிகொடுத்தருளி அவற்றின்வேண்டுகோளின்படி வரந்தரப்பெற்றவேதங்கள் ஸ்ரீகாஞ்சிபுரத்திற்குக்கிழக்கே ஒருசார்அக்கினிமூலையிற்-கிழக்குச்சமுத்திரத்திற்கு மேல்பால் காதவழிதூரத்தில் உருத்திரகோடி யென்கிற திவ்யக்ஷேத்திரத்தில் பர்வதமாகின்றன - அது வேதகிரியென்று பெயராயினது - அந்தமலையின்சிகரத்தே - லோகாநுக்கிரகத்தின்பொருட்டு நாம்திவ்யலிங்காகாரமாகிச் சாந்நித்தியமாக இருக்கின்றோம், அவ்வாறுவேதங்கள் வரம்பெற்றதை யறிந்து வேதங்களுக்கு ஆதியந்தமாயிருக்கின்ற பிரணவபுருஷன் நம்மையடைந்து நமஸ்கரித்துக் கேட்டுக்கொண்டவாறு.

ஸ்ரீகைலாசபதியே-அடியேன்தேவரீர்கிருபையினால் வேதங்களுக்கெல்லாம்ஆதியந்தமாகி-மஹாமந்திரங்களுக்கெல்லாம் முதலாயிருக்கின்றேன், என்னைவேதங்கள் நீக்கிவிட்டுத்தனியேசென்று தவஞ்செய்து வரம்பெற்றமையால் அடியேனுக்கு இருக்குமிடம் யாதென விண்ணப்பஞ்செய்யப்-பிரணவமே, நமதுசரீரமாக உன்னைவகித்திருக்கின்ற நமது சுப்பிரமண்ணியமூர்த்தியை நோக்கிப் பிரார்த்தித்தனையாயின் உனதுமனோரதம் நிறைவேறுமென்று கட்டளையிட்டருளலும்-பிரணவம், முருகக்கடவுளையடைந்து வணங்கிப் பலவாறு தோத்திரஞ்செய்தது பிள்ளையார்ஓங்காரத்தைக்கடைக்கணித்து அதன்விண்ணப்

பத்தைக்கேட்டருளி அநுக்கிரகித்தவண்ணம்-கைலையைநீங்கி யித்தலத்தின்கணெழுந்து வள்ளையார்ஓடையினீராடி அநுஷ்டானங்களைமுடித்து ஸ்கந்தரை நமஸ்கரித்து அவரைப் பூசிக்கவேண்டிக் கோயிலினீசானத்தில் பிரணவாமிர்தமெனத் தன்பேரால் ஒருதீர்த்தத்தையுண்டுபண்ணி அதனால் பிள்ளையாரை அபிஷேகித்துத் தோத்திரஞ்செய்து அன்புடன் பிரார்த்தித்தஅளவில்-ஐசுவரியமுதலிய ஆறினும் பூரணராயிருக்கின்ற ஷண்முகர் அங்குள்ள சுயம்புவாகியவிம்பத்தினின்றும் பிரத்தியக்ஷராய்வந்து தமதுபாதங்களில் நமஸ்கரித்த பிரணவபுருஷனைக் கைகளாலெடுத்தாசிர்வதித்து மஹாமந்திரயந்திரங்களில் உன்னுமெலப்படி சூழப்பட்டிருக்கின்றோமோ அப்படி யிந்தயுத்தபுரியில் - நீ-நமது பின்பக்கத்திற் சூழ்ந்து மலைவடிவமாகி யிருக்கக்கடவையென்றும், இதுமுதல்பிரணவசைலமென்றபெயர்பெறுவாயென்றும் உனதுச்சியில் உன்பாலுள்ளபிரீதியினால்கௌரீபாகராகியகைலாசநாதரும் நாமும் இடைவிடாமல்வீற்றிருந்து உன்னைச்சேவிக்கின்றஆத்மகோடிகளுக்குமனோரதங்களைப் பூர்த்திசெய்வோம்-ருத்திரகோடியில் பர்வதரூபங்களாய்நிற்கின்றவேதங்கள்உபநிஷத்கணங்களோடு- நாடோறும்உன்னைச்சேவித்துக்கொண்டிருக்கக்கடவது-உன்னருகிலிருப்பவர் உன்னைமுன்னர்வணங்கி வேதசைலத்தைப்பின்னர்ஒருமுறை தரிசிக்கப்பெறுவராயின் அவர்கட்கினிவரும் பிறவித்துன்பங்களையொழித்துக் கடாக்ஷிப்போம்-அவ்வாறேவேதகிரிக்கருகிலிருந்துமுதலிலுன்னைச் சேவித்துப் பிறகுவேதகிரியைச்சேவித்தவர்க்குச் சிவபெருமான்போகமுக்திகளையருளிச்செய்வர்.

வருடந்தோறும் ஆடிமாதக்கார்த்திகையில் தேவர்முனிவர்முதலானவர்கள்சூழக்கிரிரூபமாயிருக்கின்ற உன்சிரசில்விநாயகருடன்பார்வதிபாகராகியமகேசுவரனைப்பரார்த்தமாகநாம்பூசிப்போம்- அத்திருநாளில் உன்னாலுண்டுபண்ணப்பட்டிருக்கின்ற பிரணவதீர்த்தத்தின் மூழ்கிப் பத்தியுடன்வலம்வந்தவனுக்கு மறுபிறவி யுண்டாகமாட்டாதென்று பிரணவகிரி பிரணவதீர்த்தங்களின் விசேடங்களையும், விதீபாதம், கந்தசஷ்டி, கார்த்திகை, அமாவாசை, மாதப்பிரவேசம், சுக்கிரவாரம் இவைமுதலியதினங்களில் இங்கிருந்துமுறைப்படி விரதநோற்பார்க்குக்கிடைக்கும்பலவகைப்பயன்களையுமெடுத்தோதி விடைகொடுக்கப் பிரணவரும் அவ்வாறேயிப்பர்வதமாகிநின்றனரென விஷ்ணுதேவருக்குச் சொல்லி இலிங்கத்துள் அந்தர்த்தானமாயினர்.

———o———

யுத்தபுரி

# வேம்படிவிநாயகர்வரலாறு

---*---

தேவரும், அசுரரும், முன்னோர்காலத்தில், தாம்தாம்பராக்கிரமத்திலதிகராய்ஒருவர்க்கொருவர்நெடுங்காலம்யுத்தம்பண்ணினதில்தேவர்கள்தோற்க-அசுரர் அதிகமதோன்மத்தர்களாயுலகங்களையெல்லாம்உபத்திரவஞ்செய்யக்கண்டுதேவர்முதலானோர்முறையிடலும்விஷ்ணுதேவர்அசுரரையெதிர்ந்து பாணவருஷங்களாற்சின்னபின்னப்படுத்த-இறந்தவர்களொழிய உயிர்பிழைத்துப்புறங்கொடுத்தோடினவர்கள்பலவிடங்களினுஞ்சென்றொளித்துக்கொண்டனர், சிலர்கோபமூண்டெதிர்த்துப்போர்செய்ய-அவர்களையும், மாய்க்கத்தொடங்கின,போது அவர்கள் வலிமையற்று நிராயுதராயோடுதலும்அவர்களைவிடாமற்றொடர்ந்து விஷ்ணுதேவர்துரத்தியபோது ஓடிவந்தஅசுரர் பிருகுமுனிவர்தவஞ்செய்துகொண்டிருந்தஆச்சிரமத்தைச்சந்தித்துஅம்முனியைச்சரணமடைய விசையாமல் நாமின்னுமெங்கேயோடிப்போவோமென்றுபயந்துசுற்றிக்கொண்டிருந்தசமயத்தில்அங்குநீராடிவருகின்றபிருகுபத்தினியைக்கண்டுசரணமடைந்துதமதுகுறைகளைப்பலவாறுசொல்லியிரக்க-பிருகுபத்தினிகேட்டு நீங்கள்தேவர்க்கும்முனிவர்க்கும் சென்மவிரோதிகளானதுர்க்குணமூர்க்கராதலால்அபயங்கொடேனென்றுசொல்லிமறுக்கவும், அசுரர்காலைச்சுற்றியபாம்புபோலப்பத்தினிகாலில்வீழ்ந்துவிட்டுத்தொலையாமல்அநந்தவிதமாகக்குறையிரந்து ஓவென்றலறிக் கூச்சலிட்டுத்துயரப்பட்டதற்கிரங்கி, அவர்களை அபயாஸ்தங்கொடுத்தாதரிக்க-பின்னைதுரத்தியவிஷ்ணுதேவர்அங்குவந்துஅவர்களைக்கண்டெதிர்க்கப், பிருகுபத்தினியும் அவரைப்பிரார்த்தித்துச் சொல்லியவார்த்தைகளைஅநாதரவுசெய்துதயைபாராட்டாமல்அவ்வசுரரைத்தாக்கத்தொடங்குதலும், பிருகுபத்தினி பின்னும்விஷ்ணுவைநோக்கிஅநந்தஞாயங்கள்சொல்லியுங்கேளாமலெதிர்த்தார், பிருகுபத்தினி-அபயாஸ்தங்கொடுத்தவளாயன்றோமுன்னைசங்கரித்துத்தோற்றுவந்தஅசுரர்களை(ஞாயமோனைல்)பின்னைசங்கரிக்கவேண்டுமென்றுசிலகடுஞ்சொற்களாற்கண்டிக்கத்தொடங்குதலும் அதிககோபங்கொண்டுவிஷ்ணுதேவர் அவள்கழுத்தைச்சக்ராயுதத்தால்அறுத்துவீழ்த்தினர். அதுகண்டங்கிருந்தருஷிபத்தினிகள்கோவென்றலறியழுதுவிம்மினர், அவ்வழுகையோசையாற்பிருகுமுனிவர்தவத்தினீங்கிவிரைந்துவந்து-நடந்தகொடுமைகளைக்கேள்வியுற்றுக்கோபமிகுந்துவிஷ்ணுதேவரையழைத்துச்சினந்துநோக்கி நம

துபத்தினிக்குமருமகனாகியிருக்கின்றநீ உனதுதாயார்க்குச்சமானமாக என்னைத்தீஞ்சூழ்வினோஹத்திசெய்தென்னையுமுபேக்ஷைசெய்தனையாகையால்நீபத்துஜனனத்துயரடையக்கடவையென்றும், திருமகளைநோக்கி நீயும்உனதுதாயாருடையகொலையை உபேக்ஷையால் பார்த்துக்கொண்டுஎன்கணவன்மார்பினிடத்துத்தயையெட்டுணையுமில்லாமல்மரப்போலிருந்தாயாகையால்-கசப்பாகிய வேப்பமரமாகக்கடவையென்றுஞ்சபித்துவிட்டுச் சுக்கிராசாரியனைவருவித்தவனாற்கொண்டு மிருதசஞ்சீவினிமந்திரத்தால்முன்கழுத்தைச்சேர்த்துப் பத்தினியைப்பிழைப்பித்து அவளுடன் பர்ணசாலையிற்பிரவேசித்துத்தவத்திலிருந்தனர்.

பிருகுமுனிவரா லடைந்த சாபத்தால் திருமகள் சொல்லற்கரியமனோதுக்கமுற்றிவ்வாறுசிந்திக்கலுற்றனள்.

முனிவர்களுக்குச்சிவயோகமேஉயிர்க்குறுதியாம், அச்சிவயோகம்விக்கினேசுவரரால்இடையூறின்றிமுடிகூடும். யோகியர்தியானிப்பது ஓங்காரமாம்-பலவகைமஹாமந்திரங்கட்கும்மேன்மையுள்ளதாகிய பிரணவம்வேதத்துட்பொருளாகி யோகியருள்ளத்தின்கண்பெரியசுடரொளித்திரளாய்நிலைபெற்றிருக்கின்றதாகும், அப்பிரணவமேவிக்கினேசுவரருக்குத்திவ்யசொரூபமாகுமெனவேதாகமநூல்கள்முறையிடுதலால்-பிள்ளையாரதுகருணையாகியதுணையால் தனதுதுன்பத்திற்குமுடிவுகாணக்கூடுமென்று-வந்துயுத்தபுரியிலுள்ள பிரணவகிரிச்சாரலின் வனத்திற் கண்ணுவமுனிவரதாச்சிரமத்தினருகேதிருக்கோயில்கொண்டுவீற்றிருக்கும்விக்கினேசுவரரைச்சேவித்துத்துதித்து அன்புருவாய்க்கண்ணீர்பெருகப்பிரார்த்தித்துக்குறையிரக்கப், பிள்ளையார்ஊர்த்துவமுகத்ததாகியமூஷிகவாகனரூடராயெழுந்தருளித்தரிசனைகொடுக்க - மீண்டுந்திருமகள்பலவாறுபலதிருநாமங்களால்தோத்திரஞ்செய்துபோற்றி முன்னடந்தவற்றையும்பிருகுமுனிவரால் விஷ்ணுதேவர்க்குந்தனக்கும்-சாபமுற்றதையும்விண்ணப்பஞ்செய்ய விநாயகர் அருளிச்செய்கின்றனர்.

சர்வலோகங்களுக்கும் நிமித்தகாரணராய்-தமதுதிருவருளே சத்தியாகக்கொண்டு அநாதிமலமுத்தராய் அனைத்துயிர்க்கும் உயிராய் உணர்வுமாகித்தானேசைதன்யனுமி உலகுயிர்கள்சிறிதும்அசையாவாகவெல்லாமுந்தன்வயத்தேயாகப்-பசுபதியாகிய உடையவராய்ப் பெருமைகளுட்பெருமையும்,நுட்பங்களுள்நுட்பமுமாய் எங்குநிறைந்திருக்கின்றசிவபெருமானுக்குமனோவாக்குகாயமென்றிலும் நல்லவடியவராயினர் எவைக்கும் எவர்க்குமேலோர்-இவ்வுண்மைத்திறத்திலுள்ளாராகிய முனிவரது சாபவன்மைகடவுளாலும், ப்ரமாதிகளாலும் எளிதினீக்கரிது,

ஆயினும் அஞ்சவேண்டாம்-திருமகளே நீ அந்தணிப்ப விருக்ஷவடிவாகிய இந்நிலை பெற்றிருப்பாயாக-அதனை அகலா நாமும் நீங்காமல் வீற்றிருந்து சகலருக்கும் இஷ்ட-யூகங்களை நீங்கள் அன்னைமைப் பென்றுரைமென்ன-அவ்வாறு திருமகளும் அம்பரமாகி நிற்க-அதன் நிழலத்தில் தாமும் வீற்றிருந்தருளலும், தேவர் மலர்மாரி பொழிந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின, சகலமுனிவரரும் உலகத்திலுள்ளோரும், குதூகலித்தாநந்தமுற்றனர்.

வேம்படிவிநாயகர் திருப்புகழைத் துதித்தவர் பிள்ளையாராவர், அவ்விருக்ஷத்தை முறைமையாய்ப் பிரதக்ஷிணஞ்செய்தவர் பிறவித்துன்பங்களை வெல்வர், பிள்ளையாரைப்பூசித்தவர் எல்லாவிரதங்களையும் குறைவில்லாமற்செய்தவராவர்.

யுத்தபுரியாகிய திருப்போரூரின்கண் எத்தகையோர்க்கும் சேவை தந்தருளத் திருவுளங்கொண்டு ஸ்கந்தர், பிரமன் இந்திரன் முதலியோரை வரும்படிக் கடாக்ஷிக்க-அவர்கள் யாவரும் அங்கடைந்து வேதாகம முறைமையாய்ப் பூசித்து வணங்கிச் சந்நிதியினிற்க-ஸ்கந்தர் அவரைக் கடைக்கணித்து வருடந்தோறும் உத்தராயண கும்பரவியிற் பூருவபக்கத்திற் சகலாத்மகோடிகளுக்கும் நமது சேவையெளிதிற் சித்திக்கும்படி திருவிழாச் செய்கவென அநுஞைதந்தருளலும். கேட்டுப் பரமாநந்த பரிதராய் அவ்வநுஞையை மேற்கொண்டு ஆடிப்பாடித் துதித்துப் பெறுதற்கரிய பெருஞ்செல்வம் பெற்றோராய் வள்ளிதெய்வயானையாருடன் ஸ்கந்தருக்கு முறையே மகோற்சவங்களை விபவமாக நிறைவேற்றித்-தாந்தா மிச்சித்த வரங்களையெல்லாந் தந்தருளப்பெற்றனர்.

அதன்பின்னர், பிரணவகிரீசராகிய ஸ்ரீபாலாம்பிகைபாகதியாகக் கைலாசநாதர்க்கும் வேம்படிவிநாயகருடன் ஸ்ரீதெய்வமுருகர்-சகலதேவரும், முனிவரும் அடியார்களுங் கூற வேதாகமவிதப்படி மகோற்சவநடாத்தி சிவபெருமானது திருவருள்பெற்று அக்கடவுளுடன் திருப்போரூர்த்தலத்தின்கண் கிரியாசக்தியும் ஞானசக்தியுமாகிய தேவியரிருவருடன் திருக்கோயில்கொண்டு, வேதநெறி, ஆகமநெறி, பக்திநெறி, யிவற்றைக் கைவிடாமலொழுகாநின்ற மெய்யடியார்களுக்கும், முனிவர்தேவர் முதலியோர்க்குங் கிருபைசெய்துகொண்டு தாமும் வேம்படியில் விநாயகமூர்த்தியும் வீற்றிருந்தருளினன் என்று இவ்வாறு சூதபுராணிகர் நைமிசாரணிய முனிவரர்-பிருஹன்மசாகரத்தைக் கடக்கும்படி யுத்தபுரிக்ஷேத்திரத்தின் மஹாத்மியத்தைச் சொல்லியதென்பவாறு.

திருப்போரூர்த்தலபுராணசரித்திரச்சுருக்கம்

முற்றுப்பெற்றது.

---